1969 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளுக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

கவன ஈர்ப்பு

(அ) இராமநாதபுரம் பெரிய கண்மாயை தூர்வாரி மராமத்து செய்தல்.

திரு. தங்கப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் தாலுக்கா பெரிய கண்மாய் தூர்ந்துபோய் வேளாண்மைக்குத் தண்ணீர்ப் பற்றுக்குறை ஏற்பட்டு பயிர்கள் சாவியாகி விவசாயிகள் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாவதால், அக்கண்மாயைத் தூர்வாரி மராமத்து செய்யவேண்டிய அவசிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா. : இராமநாதபுரம் பெரிய கண்மாயைத் தூர் வாரிப் புனரமைக்கும் திட்டத்திற்கான மதிப்பீடும், வரை படங்களும் ரூபாய் பதினொரு லட்சத்து ஐம்பதாயிரத்திற்குத் தயாரிக்கப்பட்டு பொதுப்பணித் துறையினரின் பரிசீலனையிலுள்ளது. இது அரசுக்கு எட்டியதும் அது ஆலோசிக்கப் பெறும்.

திரு. டி. தங்கப்பன்: தலைவர் அவர்களே, அவசியத்தை முன்னிட்டு இந்த ஆண்டிலேயே அந்தக் கண்மாய் வேலைகளைத் துவக்க அரசு அங்கீகாரம் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே குறிப்பிட்டது போல் அவசர அவசியத்தை முன்னிட்டு தேவையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நில அடைமான வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படாமை.

திரு. ஏ. அ. சுப்பராஜா: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுறவு நில அடைமான வங்கியின் மூலமாக ஒப்பளிக்கப்பட்டும் அதற்குண்டான தொகைகளை இதுவரை பட்டுவாடா செய்யாததைப் பற்றிய அவசர அவசியப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் 1—4—1968 முதல் 15—2—1969 வரை நில அடைமான வங்கிகள் மூலமாக வழங்கப்படுவதற்கென ஒப்பளிக்கப்பட்ட நீண்ட காலக் கடன் தொகை ரூ. 122·43 இலட்சமாகும். இதையொட்டி 28—2—1969 வரை வழங்கப்பெற்ற கடன் தொகை ரூ. 72·59 இலட்சமாகும். அந்தத் தேதியில் வழங்கப் பெறுமல் இருந்த கடன்கள் தொகை ரூ. 49·85 இலட்சமாகும். இந்தத் தொகையினை நில அடைமான வங்கிகள் 31—3—1969-ம் தேதிக்குள் வழங்கி விடும்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, சில சமயங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டும் கூட பணம் வரவில்லை, காலதாமதமாகிறது என்ற நிலை இருக்கிறது. இதற்கு முன்பு இருந்த முறைப்படி இந்த மாதிரி பஞ்சாயத்துக்களில் காலதாமதம் ஆகிறது என்பதால்தான கூட்டுறவு அடைமான வங்கிகள் மூலமாக சீக்கிரத்தில் கொடுப்பதற்கு இந்தத் திட்டம் வந்தது. ஆகையால் சர்க்கார் ஒரு மாதமோ அல்லது இரண்டு மாதமோ காலவரையறை நிர்ணயித்து அந்தக் காலவரையறைக்குள் கொடுக்க வேண்டுமென்ற முறையில் உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகள் மூலமாகக் கடன் வழங்குவதில் விவசாயிகளுக்கு அலைச்சலும், செலவும், தொல்லையும், காலதாமதமும் ஆகிறது என்பதை நன்று உணர்ந்து இந்தக் குறைகளைப் போக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மாதம் 15-ம் நாள் சில முக்கியமான நல்ல முடிவுகளை எடுத்து அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவர கூட்டுறவுத் துறை அமைச்சருக்குத் தெரிவித்துள்ளார்கள். அந்த முடிவுகளைச் செயலுக்குக் கொண்டு வந்தவுடன் விவசாயிகளுக்கு அலைச்சலோ, செலவோ, தொல்லையோ, காலதாமதமோ இல்லாமல் கடன்கள் வழங்கப்படும்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: இந்தக் கஷ்டங்கள் இல்லாமல் விவசாயிகளுக்குக் கடன் கிடைப்பதற்கான முக்கியமான முடிவுகளை எடுத்திருப்பினும், பட்டியலில் உள்ளது போல் வரிசையாகக் கொடுக்காமல் சில நேரங்களில் பின்னால் இருப்பவர்களுக்கு முன்னாலும் முன்னால் இருப்பவர்களுக்குப் பின்னாலும் கொடுக்ககூடிய நிலை இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: நான் ஏற்கனவே அறிவித்தபடி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மாதம் 15—ம் தேதி, அதாவது இன்றைக்கு மூன்று நாட்களுக்கு முன்னால், முக்கியமான சில நல்ல முடிவுகளை எடுத்துள்ளார்கள். அந்த முடிவுகள் அமலுக்கு வந்த பிறகு, வரிசைக் கிரமம், அல்லது முன்பின் என்பதற்கான நிலைமைகள் எல்லாம் இல்லாமல், வெகு விரைவாகக் கடன் தொகைகள் வழங்கப்படும்.

(3) 1969-70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீதான வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 1969–70-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம். மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 16—வேளாண்மை.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண். 16—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,99,88,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

திரு ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்: பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண். 16—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 15,99,88,900-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.